## 7.1 குடித்தொகை, தொழிற்படை மற்றும் தொழில் நிலை


### 7.1 பொது நோக்கு

1998ஆம் ஆண்டிலிருந்து அவதானிக்கப்பட்டதொரு போக்கில், 2000ஆம் ஆண்டில் நடுவாண்டுக் குடித்தொகையின் வளர்ச்சி வீதம் தொடர்ந்தும் உயர்வடைந்தது. இது குடித்தொகையில் ஏற்பட்ட இயற்கையான அதிகரிப்பு (அதாவது இறப்பைக் கழித்த பிறப்பு) தேறிய குடிவரவு (அதாவது குடியகல்வைக் கழித்த குடிவரவு) என்பனவற்றின் இணைந்த விளைவாகும். 2000ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டின் இறுதியில் குடியிருப்பாளர் தொழிற்படை 6.7 மில்லியன் என மதிப்பிடப்பட்டு 49 சதவீதம் கொண்ட தொழிற்படைப் பங்கேற்பினைப் பிரதிபலித்தது. அதேவேளை 2000ஆம் ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகளிலும் ஏறத்தாழ 260,000 தொழில்கள் உருவாக்கப்பட்டதன் காரணமாக, இது மொத்தத் தொழில்நிலையை 1999இல் தொழிற்படையின் 91 சதவீதத்திலிருந்து 2000ஆம் ஆண்டில் 92 சதவீதத்திற்கு உயர்த்தியது. இது தனியார் மற்றும் அரசதுறை இரண்டிலுமேற்பட்ட தொழில்நிலையின் வளர்ச்சியை உள்ளடக்கியிருந்தது. இதன் காரணமாக, தொழிலின்மை வீதம் 1999இன் 9 சதவீதத்திலிருந்து 2000ஆம் ஆண்டில் 8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. எனினும், மொத்தத் தொழில்நிலையில் அரசதுறையின் தொழில்நிலையின் பங்கு 2000ஆம் ஆண்டில் மேலும் வீழ்ச்சியடைந்து காணப்பட தனியார்துறை முக்கிய தொழில் உருவாக்குநராகத் தொடர்ந்தும் காணப்பட்டது. 2000ஆம் ஆண்டில் வெளிநாட்டுத் தொழில்வாய்ப்பு ஏறத்தாழ 166,000 ஆகக் காணப்பட்டது. எனினும் தொழிற்சந்தையின் பொருத்தப்பாடின்மையின் காரணமாக படித்த இளைஞரிடையே காணப்படும் உயர்ந்த தொழிலின்மை வீதம் அச்சுறுத்துகின்ற பிரச்சனையாக தொடர்ந்தும் காணப்படுகின்றமையினால் நாட்டின் கல்விச் சீர்திருத்தங்களுக்கான அவசர தேவை முக்கியமாகக் காணப்படுகின்றது.

வரைபடம் 7.1

தொழிற்படையின் போக்குகளும் தொழிலின்மையும்

1990 – 2000




### 7.2 குடித்தொகை

2000ஆம் ஆண்டின் நடுவாண்டுக் குடித்தொகை 19.36 மில்லியனாக மதிப்பிடப்பட்டு, நடுவாண்டுக் குடித்தொகை வளர்ச்சி 1999இன் 1.4 சதவீதங்கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1.7 சதவீதம் கொண்ட வளர்ச்சியைக் காட்டியது. குடித்தொகையில் ஏற்பட்ட இயற்கையான அதிகரிப்பு குடிவரவில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு ஆகிய இரண்டும் உயர்ந்த நடுவாண்டுக் குடித்தொகை வளர்ச்சிக்குப் பங்களித்தன. குடித்தொகையின் இயற்கையான அதிகரிப்பு 1999இன் 209,000 இலிருந்து 2000ஆம் ஆண்டில் 230,000 ஆட்களுக்கு அதிகரித்தது. அதேவேளை, தேறிய குடிவரவு முன்னைய ஆண்டின் 60,000 ஆட்களுடன் ஒப்பிடுகையில் 2000ஆம் ஆண்டில் 87,000 ஆட்களாகக் காணப்பட்டது. இதனால், நடுவாண்டுக் குடித்தொகைக்கு கூடுதலாகச் சேர்க்கப்பட்ட தொகை அதாவது குடித்தொகையில் இயற்கையாக ஏற்பட்ட அதிகரிப்புடன் தேறிய குடிவரவையும் கூட்டியதொகை 317,000ஆட்கள் என மதிப்பிடப்பட்டது. சதுர கிலோமீட்டர் நிலத்திற்கான ஆட்களின் எண்ணிக்கை என வரைவிலக்கணம் செய்யப்பட்ட குடித்தொகை அடர்த்தி 1999இன் 304 இலிருந்து 2000ஆம் ஆண்டில் 309 இற்கு சிறிதளவால் அதிகரித்தது.

**அட்டவணை 7.1**

**குடித்தொகையின் அடிப்படைக் குறிகாட்டிகள்**

| ஆண்டு | நடுவாண்டுக் குடித் தொகை ('000)(அ) | நடுவாண்டுக் குடித் தொகை வளர்ச்சி % | செப்பமற்ற பிறப்பு வீதம் ('000 ஆட்கள்) (அ) | செப்பமற்ற இறப்பு வீதம் ('000 ஆட்கள்) (ஆ) | குடியகல்வு தேறிய வீதம் ('000 ஆட்கள்) (ஆ) |
|---|---|---|---|---|---|
| 1990 | 17,015 | 1.1 | 21.1 | 6.1 | -3.7 |
| 1991 | 17,267 | 1.5 | 19.7 | 5.6 | 0.8 |
| 1992 | 17,426 | 0.9 | 20.8 | 5.7 | -5.9 |
| 1993 | 17,646 | 1.3 | 20.4 | 5.6 | -2.2 |
| 1994 | 17,891 | 1.4 | 20.2 | 5.5 | -0.8 |
| 1995 | 18,136 | 1.4 | 19.4 | 5.6 | -0.1 |
| 1996 | 18,336 | 1.1 | 18.7 | 6.4 | -1.4 |
| 1997 | 18,552 | 1.2 | 18.5 | 6.2 | -0.5 |
| 1998 | 18,774 | 1.2 | 17.8 | 6.2 | 0.4 |
| 1999 | 19,043 | 1.4 | 17.0 | 5.9 | 3.2 |
| 2000(இ) | 19,359 | 1.7 | 17.9 | 6.0 | 4.6 |

*மூலங்கள்: பதிவாளர்நாயகத்தின் திணைக்களம். இலங்கை மத்திய வங்கி.*

(அ) குடிமதிப்பு ஆண்டுகளின் குடித்தொகை தரவு சம்பந்தப்பட்ட குடிமதிப்புக்களிலிருந்து பெறப்பட்டுள்ளன. இரண்டு குடிமதிப்புகளுக்கு இடையேயான ஆண்டுகளுக்கு குடித்தொகை மதிப்பு பிறப்பு இறப்பு மற்றும் குடியகல்வு என்பனவற்றின் மீதான பதிவாளர் நாயகத்தின் முக்கிய புள்ளிவிபரங்களின் அடிப்படையில் பதிவாளர் நாயகத்தின் திணைக்களத்தினால் நடுவாண்டுக் குடித்தொகை மதிப்பிடப்படுகின்றது.

(ஆ) பதிவாளர் நாயகத்தின் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட நடுவாண்டுக் குடித்தொகை மதிப்பீடுகளின்படி இலங்கை மத்திய வங்கியினால் பெறப்பட்டது. பதிவாளர் நாயகத்தின் திணைக்களத்தின் ஆண்டுத் தரவுகளின்படி கணிக்கப்பட்ட வீதங்கள் புள்ளிவிபரப் பின்னிணைப்பு அட்டவணை 44இல் தரப்பட்டுள்ளது.

(இ) தற்காலிகமானவை.

அட்டவணை 7.2
தென்னாசிய பிராந்திய சனத்தொகை

| நாடு | மொத்த சனத்தொகை (மில்லியன்) | | வருடாந்த சராசரி சனத்தொகை வளர்ச்சி வீதம்(%) | | குடித்தொகை பரம்பல் (கி.மீ.இற்கான சனத்தொகை) |
|---|---|---|---|---|---|
| | 1998 | 2015(அ) | 1980/98 | 1998 / 2015(அ) | |
| இந்தியா | 979.7 | 1224.4 | 2.0 | 1.3 | 336 |
| பாக்கித்தான் | 131.6 | 194.6 | 2.6 | 2.3 | 175 |
| வங்காளதேசம் | 125.6 | 161.8 | 2.1 | 1.5 | 981 |
| நேபாளம் | 22.9 | 32.5 | 2.5 | 2.1 | 164 |
| **இலங்கை** | **18.8** | **22.6** | **1.3** | **1.1** | **304** |

(அ) எறிவுகள். மூலம்: உலக அபிவிருத்தி அறிக்கை 2000/2001

2000ஆம் ஆண்டிற்கான உலக அபிவிருத்தி அறிக்கையின்படி, இலங்கையின் ஆண்டுச்சராசரி குடித்தொகை வளர்ச்சிவீதம் தென்னாசியப் பிராந்தியத்திலுள்ள பெரும்பாலான நாடுகளின் வளர்ச்சி வீதத்தினைவிட மிகக் குறைவாக இருக்கின்றமைக்கு, அண்மைய ஆண்டுகளில் இடம்பெற்றுவரும் மற்றைய சமூகப் பொருளாதார நிலைமைகளில் ஏற்பட்டுவரும் முன்னேற்றங்களுடன் சேர்ந்து குடிப்பரம்பல் மாற்றங்களுக்குட்பட்டு வருவதே காரணமாகும்.

எனினும், ஆண்டு தோறும் நாட்டின் குடித்தொகைக்கு ஏறத்தாழ 200,000 இலிருந்து 300,000 வரையான ஆட்கள் மேலதிகமாகச் சேர்க்கப்படுவது வரையறுக்கப்பட்ட அதன் மூலவளங்களின் மீது தொடர்ச்சியாகச் சுமையை ஏற்படுத்தும். இப்பிரச்சனையை மேலும் சிக்கலாக்கும் விதத்தில் மொத்தக் குடித்தொகையில் 55 வயதிற்கும் அதற்கு மேற்பட்டவர்களையும் கொண்ட வயதுத் தொகுதியினரின் பங்கு 14 வயதினையும் அதற்கு உட்பட்டவர்களினதையும் விட விரைவாகத் தொடர்ந்து வளர்ச்சியடைந்து வருவதாகும். இது வயது முதிர்ந்த குடித்தொகையுடன் தொடர்பான பிரச்சனைகள் தோற்றம் பெறுவதற்கான சாத்தியங்கள் நிறைய உள்ளமையைப் பிரதிபலிப்பதாகவுள்ளது. தொழில்வாய்ப்பின்மை, உயர்ந்த தங்கியிருக்கும் வீதம், நிலம் துண்டுபடுதல், கல்வி, சுகாதாரம், வீடமைப்பு போன்ற சமூக நலன்புரி விடயங்களின் உயர்ந்த செலவினம் என்பனவும் வயது முதிர்ந்த குடித்தொகையுடன் பின்னிப் பிணைந்த பிரச்சனைகளும் குடித்தொகையின் தற்போதைய அமைப்பு மற்றும் போக்கு என்பனவற்றுடன் பிணைந்துள்ள சில பிரச்சனைகளைக் கட்டுப்படுத்தும் தேவை அவசரமாகக் கவனிக்கப்பட வேண்டியதாகும். குறிப்பாக உழைக்கின்ற குடித்தொகையின்மீது மேலதிக சுமைகளை விதிக்காமல், வயது முதிர்ந்தோரின் வாழ்க்கைத்தரம் மோசமடைவதனைத் தவிர்ப்பதற்கு நன்கு திட்டமிடப்பட்ட சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் ஊடாக வயது முதிர்ந்தோரின் பிரச்சனைகள் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.

## 7.3 தொழிற்படை

தொழிற்படை என்பது 10 இனையும் அதற்கு மேற்பட்ட வயதினையும் கொண்ட வேலை செய்யக்கூடிய மற்றும் வேலை செய்ய ஆர்வம் கொண்ட ஆட்களையும் கொண்டது என வரைவிலக்கணம் செய்யப்படுகிறது. தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட காலாண்டுத் தொழிற்படை அளவீட்டின்படி, 2000ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டின் இறுதியில் குடியிருப்பாளர் தொழிற்படை 6.7 மில்லியன் என மதிப்பிடப்பட்டு தொழிற்படை பங்கேற்பு வீதம் (10 இனையும் அதற்கு மேற்பட்ட வயதினையும் கொண்ட குடியிருப்பாளர் குடித்தொகைக்கு தொழிற்படையின் விகிதம்) 1999இன் மூன்றாம் காலண்டில் காணப்பட்ட 51 சதவீதத்திலும் 2000ஆம் ஆண்டின் முன்னைய காலாண்டில் காணப்பட்ட 52 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 49 சதவீதமாகவும் காணப்பட்டது. தொழிற்படை பங்கேற்பு வீதம் 1990 - 2000 காலப்பகுதியில் 48 சதவீதத்திற்கும் 52 சதவீதத்திற்குமிடையிலான வீச்சில் வேறுபட்டதுடன் 1990இல் இவ்வீதம் 52 சதவீதமாகக் காணப்பட்டது. 1997வரை இவ்வீதம் வீழ்ச்சியடைந்ததெனினும் 1998இல் மீண்டுமொருமுறை 52 சதவீதத்திற்கு உயர்வடைந்தது.

அட்டவணை 7.3
தொழிற்படை பங்கேற்பு

| காலம் | குடும்ப அலகுகளின் குடித் தொகை (அ)('000 ஆட்கள்) | தொழிற் படை ('000 ஆட்கள்) | தொழி லிலுள் ளோர் ('000 ஆட்கள்) | தொழி லற்றோர் ('000 ஆட்கள்) | தொழிற் படை பங்கேற்பு வீதம் (%)(ஆ) |
|---|---|---|---|---|---|
| 1990 | 11,574 | 6,001 | 5,047 | 954 | 51.9 |
| 1991 | 11,796 | 5,877 | 5,016 | 862 | 49.8 |
| 1992 | 12,058 | 5,808 | 4,962 | 846 | 48.2 |
| 1993 | 12,278 | 6,032 | 5,201 | 831 | 49.1 |
| 1994 | 12,493 | 6,079 | 5,281 | 798 | 48.7 |
| 1995 | 12,736 | 6,106 | 5,357 | 749 | 47.9 |
| 1996 | 12,831 | 6,242 | 5,537 | 705 | 48.7 |
| 1997 | 12,871 | 6,266 | 5,608 | 658 | 48.7 |
| 1998 | 12,882 | 6,661 | 6,049 | 611 | 51.7 |
| 1999 | 13,169 | 6,673 | 6,082 | 510 | 50.7 |
| 1ஆம்காலாண்டு | 12,896 | 6,739 | 6,159 | 580 | 52.3 |
| 2ஆம்காலாண்டு | 13,128 | 6,495 | 5,943 | 552 | 49.5 |
| 3ஆம்காலாண்டு | 13,202 | 6,705 | 6,092 | 613 | 50.8 |
| 4ஆம்காலாண்டு | 13,462 | 6,758 | 6,137 | 621 | 50.2 |
| 2000(இ) | 13,538 | 6,867 | 6,343 | 524 | 50.7 |
| 1ஆம்காலாண்டு | 13,498 | 6,854 | 6,308 | 546 | 50.8 |
| 2ஆம்காலாண்டு | 13,542 | 7,042 | 6,549 | 493 | 52.0 |
| 3ஆம்காலாண்டு | 13,573 | 6,705 | 6,172 | 532 | 49.4 |

மூலம்: குடிமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்.

(அ) பத்து வயதும் அதற்கு மேற்பட்ட குடும்ப அலகுகளின் குடித்தொகை.
(ஆ) குடும்ப அலகுகளின் குடித்தொகையில் தொழிற்படையின் வீதம்.
(இ) முதல் மூன்று காலாண்டுகளின் சராசரி.

1998இல் தொழிற்படை பங்கேற்பு வீதத்தில் ஏற்பட்ட இந்நேர்மாற்றத்திற்கு, இவ்வாண்டிலிருந்து கூலி வழங்கப்படாத குடும்ப வேலையாட்களைக் கொண்ட வகைகளை தொழிற்படையில் உள்ளடக்கும் விதத்தில் தொகைமதிப்புப் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் தரவு உள்ளடக்கப்பகுதி விரிவாக்கப்பட்டமை ஓரளவு காரணமாக இருந்தது. கூலி வழங்கப்படாத பெரும்பாலான குடும்ப வேலையாட்கள் வேளாண்மைத் துறையிலேயே தொழில் செய்தனர். இதனால் 2000ஆம் ஆண்டின்மூன்றாம் காலாண்டில் தொழிற்படைப் பங்கேற்பு வீதம் வீழ்ச்சியடைந்தமைக்கு . பருவகாலக் காரணிகள் அதாவது இக்காலப்பகுதியில் வேளாண்மை நடவடிக்கைகள் குறைவடைந்திருந்தமையே ஓரளவு காரணமாக இருக்கமுடியும். 2000ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டிலிருந்து மூன்றாம் காலாண்டு வரையான காலப்பகுதியில் கூலி வழங்கப்படாத குடும்ப வேலையாட்களின் பங்கில் ஏற்பட்ட வீழ்ச்சி முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியின் 1.2 சதவீதப் புள்ளியுடன் ஒப்பிடுகையில் 2.9 சதவீதமாகக் காணப்பட்டது.

## 7.4 தொழில்நிலை

தொகை மதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் காலாண்டுத் தொழிற்படை அளவீட்டில் பின்பற்றப்படுகின்ற வரைவிலக்கணத்தின்படி தற்பொழுது தொழில்புரியும் ஒருவர் என்பது கொடுப்பனவிற்காக, இலாபத்திற்காக அல்லது குடும்பத்தின் நன்மைக்காக கொடுப்பனவின்றி தரவு சேகரிக்கப்படுவதற்கு முன்பாக, ஒரு கிழமையில் ஒரு மணித்தியாலம் அல்லது அதற்குமேல் பணியில் ஈடுபட்டவர் எனப் பொருள்படும். சுகயீனம் மோசமான வானிலை மற்றும் தொழில் பிணக்கு போன்ற காரணிகளின் காரணமாக தற்காலிகமாக தொழிலின்றி இருக்கும் ஒருவரும் தொழிலிலிருப்பவராகவே கருதப்படுகிறார். அளவீட்டு வரைவிலக்கணத்தின்படி, அரச மற்றும் தனியார்துறை ஊழியர்கள், தொழில் வழங்குநர்கள், சுய தொழில் புரிவோர் (சொந்தமாகத் தொழில் புரிவோர்) மற்றும் கூலி பெறாத குடும்ப வேலையாட்கள் என பரந்தளவில் வேலையாட்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

தொழில் நிலையிலுள்ள தொழிற்படையின் சதவீதம் 2000ஆம் ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகளிலும் தொடர்ந்து அதிகரித்தது. மொத்தத் தொழில் பார்ப்போர் 1990இல் தொழிற்படையின் 84 சதவீதத்திலிருந்து 2000ஆம் ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகளிலும் 92 சதவீதத்திற்கு உயர்வடைந்தனர். முக்கியமான தொழில் உருவாக்கத் துறைகளாக தயாரிப்பு, வேளாண்மை, வர்த்தகம் மற்றும் சுற்றுலா விடுதிகள், நிதி, காப்புறுதி மற்றும் உண்மைச் சொத்து

அட்டவணை 7.4
தொழில்நிலை

சதவீதம்

| காலம் | தொழில்நிலை | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | அரச துறை ஊழியர் | தனியார் துறை ஊழியர் | தொழில் தருநர் | சுய தொழில் | கொடுப்பனவுகளற்ற குடும்ப தொழிலாளர் | மொத்தம் |
| 1990 | 21.5 | 33.7 | 1.8 | 29.2 | 13.8 | 100 |
| 1991 | 22.9 | 39.5 | 2.2 | 25.4 | 10.0 | 100 |
| 1992 | 20.0 | 40.0 | 1.6 | 27.1 | 11.2 | 100 |
| 1993 | 17.4 | 42.8 | 2.0 | 27.4 | 10.4 | 100 |
| 1994 | 16.4 | 44.3 | 2.3 | 27.2 | 9.8 | 100 |
| 1995 | 15.6 | 44.3 | 2.5 | 28.3 | 9.4 | 100 |
| 1996 | 15.0 | 45.8 | 2.3 | 26.8 | 10.0 | 100 |
| 1997 | 15.1 | 44.3 | 2.3 | 28.8 | 9.4 | 100 |
| 1998 | 14.5 | 41.2 | 1.9 | 28.9 | 13.6 | 100 |
| 1999 | 14.4 | 43.1 | 2.0 | 28.3 | 12.2 | 100 |
| 1ஆம்காலாண்டு | 15.0 | 39.7 | 1.6 | 28.8 | 14.9 | 100 |
| 2ஆம்காலாண்டு | 14.8 | 42.2 | 2.4 | 28.3 | 12.3 | 100 |
| 3ஆம்காலாண்டு | 13.8 | 45.3 | 2.0 | 27.8 | 11.1 | 100 |
| 4ஆம்காலாண்டு | 14.2 | 45.1 | 1.9 | 28.2 | 10.6 | 100 |
| 2000 (அ) | 13.6 | 43.2 | 2.3 | 27.6 | 13.3 | 100 |
| 1ஆம்காலாண்டு | 13.8 | 43.9 | 2.1 | 27.0 | 13.2 | 100 |
| 2ஆம்காலாண்டு | 13.9 | 41.9 | 2.1 | 27.3 | 14.8 | 100 |
| 3ஆம்காலாண்டு | 13.0 | 43.9 | 2.7 | 28.6 | 11.9 | 100 |

(அ) முதல் மூன்று காலாண்டுகளின் சராசரி

மற்றும் கட்டடவாக்கம் என்பன காணப்பட்டன. இலங்கை முதலீட்டுச்சபையின்படி, 2000ஆம் ஆண்டுப்பகுதியில் முதலீட்டுச்சபையின் ஒப்புதலைப் பெற்ற செயற்றிட்டங்கள் ஏறத்தாழ 41,000 புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்கியுள்ளன. புடவைகள் அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகள் பணிகள் மற்றும் தோட்டக்கலை ஆகிய துறைகள் ஏறத்தாழ 30,000 புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்கியுள்ளதுடன் இது, முதலீட்டுச்சபைச் செயற்றிட்டங்களினால் உருவாக்கப்பட்ட மொத்தத் தொழில் நிலையில் ஏறத்தாழ 73 சதவீதத்திற்கும் வகைகூறியது.

அட்டவணை 7.5
அரசதுறை தொழில் நிலை

| ஆண்டு | அரச நிறுவனங்கள்(அ) | அரசுசார் நிறுவனங்கள்(ஆ) | மொத்தம் |
|---|---|---|---|
| 1990 | 649,000 | 703,200 | 1,352,200 |
| 1994 | 699,898 | 625,266 | 1,325,164 |
| 1995 | 737,504 | 569,484 | 1,306,988 |
| 1996 | 752,194 | 409,278 | 1,161,472 |
| 1997 | 762,067 | 309,633 | 1,071,700 |
| 1998 | 790,492 | 300,654 | 1,091,146 |
| 1999 (இ) | 822,122 | 298,248 | 1,120,370 |
| 2000 (இ) | 856,665 | 299,615 | 1,156,280 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(அ) மத்திய அரசாங்கம், உள்ளூராட்சி மன்றம், மாகாண சபைகள்
(ஆ) அரச கூட்டுத்தாபனங்கள், சபைகள், அதிகாரசபைகள் போன்றன.
(இ) தற்காலிகமானவை

மொத்தத் தொழில் நிலையில் அரசதுறைத் தொழில் நிலையின் பங்கு 2000ஆம் ஆண்டிலும் வீழ்ச்சியடைந்து, அதன் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கினைத் தொடர்ந்தது. இதன்பங்கு 1990இன் 21.5 சதவீதத்திலிருந்து 2000ஆம் ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகளில் 13.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. தனியார்துறைத் தொழில்நிலை உருவாக்கத்திற்கான முக்கிய உதவுக் காரணியாக விளங்கி வருவதற்கு இதன் பொருளாதார நடவடிக்கைகள் விரைவாக விரிவடைந்து வருவதே காரணமாகும். மொத்தத் தொழில் நிலையில் அரசதுறையின் (அரசு மற்றும் அரசுசார்துறை) வீழ்ச்சியடைந்து செல்லும் பங்கும் மீளமைப்புக்கள் மற்றும் அரசுசார் நிறுவனங்களின் தற்போது நடைபெற்றுவரும் தனியார்மயமாக்கல் நிகழ்ச்சித் திட்டங்கள் என்பனவற்றைப் பிரதிபலித்தது. எனினும் மத்திய வங்கியினால் நடத்தப்பட்ட மத்திய அரசாங்கம் உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள், மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் அதிகார சபைகள் போன்ற அரசுசார் நிறுவனங்கள் என்பனவற்றை உள்ளடக்கிய அரசதுறையின் தொழில்நிலை அளவீடு 2000ஆம் ஆண்டில் ஏறத்தாழ 1,160,000 இற்கு 3.2 சதவீதத்தினால் அதிகரித்தமையைக் காட்டியது. அரசதுறைத் தொழில்நிலை ஏறத்தாழ 36,000இனால் விரிவடைந்தமைக்கு 34,500 கொண்ட அதிகரிப்பினைக் காட்டிய அரச நிறுவனங்களின் தொழில் நிலையே முக்கிய பங்களிப்புக் காரணியாக விளங்கியது. குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கள் பாதுகாப்பு ஆளணியினர் ஆசிரியர்கள் மற்றும் சமுர்த்தி வேலையாட்களில் காணப்பட்டன. 2000ஆம் ஆண்டில் அரசுசார் நிறுவனங்களின் தொழில்நிலை 300,000இற்கு ஏறத்தாழ 1 சதவீதத்தினால் சிறிதளவு அதிகரித்தது.

## 7.5 தொழில் வாய்ப்பின்மை

தனியார்துறை மற்றும் அரசதுறை இரண்டினதும் தொழில்நிலை வளர்ச்சியடைந்தமையின் காரணமாக 2000ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டுவரை தொழில் வாய்ப்பின்மை வீதம் 1999இன் மட்டத்தைவிட குறைவாகவே இருந்தது. 1990இல் 15.9 சதவீதத்திலிருந்து 1999இல் 8.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்திருந்த இவ்வீதம் 2000ஆம் ஆண்டின் முதல் மூன்று காலாண்டுப்பகுதியில் 7.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. தொழில் வாய்ப்பின்மையின் மதிப்பீடு 1998இலிருந்து கீழ்நோக்கிய தன்மையைக் கொண்டிருந்தமைக்கு சம்பளமற்ற குடும்ப வேலையாட்கள் தொழில்புரியும் ஆட்களாக தொழிற்படையில் உள்ளடக்கத்தக்க விதத்தில் உள்ளடக்கம் அதிகரிக்கப்பட்டமையே காரணமாகும். எனினும் தொழில் வாய்ப்பின்மையின் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கு சம்பளமற்ற குடும்ப வேலையாட்களை நீக்கிவிடும் விதத்தில் வீதம் சீராக்கப்பட்டவிடத்தும்கூட தெளிவாகவே காணப்பட்டது. இதனால் சீராக்கப்பட்ட

அட்டவணை 7.6
**தொழிலற்றோர் வீதம்**
**(தொழிற்படையின் சதவீதமாக)**

| காலம் | தொடர்பான ஒருவார காலம் | | | | தொடர்பான 12 மாத காலம் எல்லோரும் |
|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | எல்லாம | சம்பளமற்ற குடும்ப வேலை யாட்கள்தவிர (அ) | |
| 1990 | 11.8 | 23.4 | 15.9 | 18.0 | 17.4 |
| 1991 | 10.2 | 23.0 | 14.7 | 16.0 | 16.1 |
| 1992 | 10.7 | 22.9 | 14.6 | 16.1 | 16.2 |
| 1993 | 9.7 | 21.7 | 13.8 | 15.1 | 17.5 |
| 1994 | 9.7 | 20.1 | 13.1 | 14.3 | 12.9 |
| 1995 | 8.8 | 18.8 | 12.3 | 13.4 | 12.0 |
| 1996 | 8.5 | 18.0 | 11.3 | 12.4 | 11.8 |
| 1997 | 7.7 | 16.1 | 10.5 | 11.5 | 11.6 |
| 1998 | 6.5 | 14.0 | 9.2 | 10.5 | 10.4 |
| 1999 | 6.7 | 13.0 | 8.9 | 10.0 | 9.1 |
| 1ஆம்காலாண்டு | 6.8 | 11.8 | 8.6 | 10.0 | 8.2 |
| 2ஆம்காலாண்டு | 6.3 | 13.0 | 8.5 | 9.6 | 9.0 |
| 3ஆம்காலாண்டு | 7.4 | 12.6 | 9.1 | 10.2 | 10.2 |
| 4ஆம்காலாண்டு | 6.3 | 14.7 | 9.2 | 10.2 | 9.9 |
| 2000 (ஆ) | 5.9 | 11.0 | 7.7 | 8.7 | 8.4 |
| 1ஆம்காலாண்டு | 6.4 | 11.1 | 8.0 | 9.1 | 8.8 |
| 2ஆம்காலாண்டு | 5.3 | 10.1 | 7.0 | 8.1 | 7.8 |
| 3ஆம்காலாண்டு | 6.0 | 11.8 | 8.0 | 8.9 | 8.6 |

மூலங்கள்: குடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம். இலங்கை மத்திய வங்கி.

(அ) தொழிலிலுள்ள தொழிற்படையிலிருந்து சம்பளமற்ற குடும்ப வேலையாட்களை நீக்குவதன் மூலம் மதிப்பிடப்பட்ட தொழிலின்மை வீதம்.
(ஆ) முதல் மூன்று காலாண்டுகளின் சராசரி.

தொழில்வாய்ப்பின்மை வீதம் 1999இன் 10 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2000ஆம் ஆண்டில் 8.7 சதவீதத்தில் மதிப்பிடப்பட்டதுடன் இது 1999இலிருந்து 2000 வரையான ஒரு சதவீதப் புள்ளிக்கும் கூடுதலான வீழ்ச்சிக்குச் சமமான தன்மையை எடுத்துக் காட்டியது. மேலும் ஓராண்டு தொடர்பான காலப்பகுதியில் ஆட்களின் தொழிற்படை நடவடிக்கைகளை அடிப்படையாகக் கொண்ட காலாண்டு தொழிற்படை அளவீட்டில் தொழிலுள்ள மற்றும் தொழிலற்ற ஆட்களும் அடையாளங் காணப்பட்டுள்ளனர். இவ்வரைவிலக்கணத்தின்படி, ஆள் ஒருவர் அவன்/அவள் அளவீட்டிற்கு முன்னரான பன்னிரண்டு மாத காலப்பகுதியில் இருபத்தாறு கிழமைகள் அல்லது அதற்குக் கூடுதலான காலப்பகுதியில் தொழிலின்றி இருந்திருப்பின் அவர் வழமையாக தொழிலற்றவராகக் கருதப்படுகின்றார். இவ்வரைவிலக்கணம் தொடர்பான தொழில்வாய்ப்பின்மை வீதமும் 1990இன் 17.4 சதவீதத்திலிருந்து 2000ஆம் ஆண்டின் முதல் மூன்று காலாண்டுப்பகுதியில் 8.4 சதவீதத்திற்கு குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைக் காட்டியது.

பெண்களின் தொழில்வாய்ப்பின்மை வீதம் ஆண்களின் தொழில்வாய்ப்பின்மை வீதத்தினைவிட ஓரளவு விரைவாகத் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தது. பெண்களின் தொழில் வாய்ப்பின்மை வீதம் 1990இன்

### அட்டவணை 7.7
### வயது அடிப்படையில் தொழிலற்றோர் வீதம்
### (தொழிற்படை சதவீதம்)

| காலம் | வயதுத் தொகுதியினர் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 15 – 19 | 20 – 29 | 30 – 39 | 40 – 49 | 50உம் அதற்கு மேலும் | எல்லாம் |
| *1990* | 40.1 | 30.3 | 8.4 | 4.0 | 2.1 | 15.9 |
| *1991* | 37.6 | 27.5 | 9.1 | 3.6 | 1.0 | 14.7 |
| *1992* | 39.1 | 27.5 | 7.8 | 3.5 | 1.4 | 14.6 |
| *1993* | 38.4 | 25.2 | 8.4 | 3.3 | 1.5 | 13.8 |
| *1994* | 40.7 | 24.5 | 7.6 | 2.5 | 1.2 | 13.1 |
| *1995* | 60.5 | 31.7 | 8.0 | 2.9 | 0.4 | 12.3 |
| *1996* | 36.5 | 22.0 | 6.0 | 1.9 | 0.5 | 11.3 |
| *1997* | 34.0 | 21.9 | 5.2 | 1.7 | 0.6 | 10.5 |
| *1998* | 27.3 | 19.3 | 4.9 | 2.0 | 0.7 | 9.2 |
| *1999* | 28.4 | 18.9 | 4.4 | 1.6 | 1.0 | 8.9 |
| *1ஆம் காலாண்டு* | 25.5 | 20.2 | 4.0 | 1.1 | 0.8 | 8.6 |
| *2ஆம் காலாண்டு* | 29.5 | 17.3 | 4.2 | 1.7 | 1.4 | 8.5 |
| *3ஆம் காலாண்டு* | 32.0 | 18.9 | 5.3 | 1.3 | 0.8 | 9.1 |
| *4ஆம் காலாண்டு* | 27.2 | 19.3 | 4.2 | 2.2 | 1.0 | 9.2 |
| *2000 (அ)* | 22.0 | 17.9 | 3.6 | 1.3 | 0.9 | 7.7 |
| *1ஆம் காலாண்டு* | 22.1 | 19.0 | 3.8 | 1.1 | 0.7 | 8.0 |
| *2ஆம் காலாண்டு* | 22.5 | 15.0 | 3.6 | 1.6 | 0.9 | 7.0 |
| *3ஆம் காலாண்டு* | 21.3 | 19.7 | 3.3 | 1.2 | 1.0 | 8.0 |

*மூலம்: குடிமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களம்.*

*(அ) முதல் மூன்று காலாண்டுக்குமான சராசரி.*

### அட்டவணை 7.8
### கல்வி அடிப்படையில் தொழிலற்றோர் வீதம்
### தொழிற்படையின் சதவீதம்

| காலம் | பாடசாலை செல்லாதோர் ஆண்டு 1–5 | வகுப்பு 0–4 ஆண்டு 6–10 | வகுப்பு 5–9 பொ.க.தே.சா. | க.பொ.த.(சா.த.) தே.க.பொ.த.ப. | க.பொ.த.(உ.த.) | எல்லாம் |
|---|---|---|---|---|---|---|
| *1990* | 3.3 | 5.1 | 17.2 | 23.9 | 29.4 | 15.9 |
| *1991* | 3.9 | 4.9 | 14.9 | 25.0 | 24.6 | 14.7 |
| *1992* | 3.0 | 4.7 | 15.9 | 22.2 | 22.4 | 14.6 |
| *1993* | 3.1 | 4.9 | 13.7 | 21.3 | 23.3 | 13.8 |
| *1994* | 2.6 | 5.0 | 13.0 | 19.6 | 23.7 | 13.1 |
| *1995* | 1.8 | 3.4 | 12.8 | 18.4 | 20.0 | 12.3 |
| *1996* | 2.8 | 3.4 | 12.2 | 16.4 | 19.0 | 11.3 |
| *1997* | 2.0 | 2.4 | 10.6 | 15.9 | 19.3 | 10.5 |
| *1998* | 1.0 | 2.4 | 9.0 | 13.7 | 17.5 | 9.2 |
| *1999* | 0.4 | 1.9 | 8.2 | 13.6 | 17.9 | 8.9 |
| *1ஆம் காலாண்டு* | 0.1 | 1.7 | 8.0 | 12.4 | 19.6 | 8.6 |
| *2ஆம் காலாண்டு* | 1.1 | 1.7 | 8.2 | 12.5 | 15.8 | 8.5 |
| *3ஆம் காலாண்டு* | 0.3 | 2.2 | 9.1 | 13.8 | 16.9 | 9.1 |
| *4ஆம் காலாண்டு* | 0.1 | 2.1 | 7.3 | 15.6 | 19.3 | 9.2 |
| *2000* | 1.4 | 1.1 | 7.4 | 11.5 | 14.6 | 7.7 |
| *1ஆம் காலாண்டு* | 1.3 | 1.1 | 7.9 | 11.2 | 15.4 | 8.0 |
| *2ஆம் காலாண்டு* | 1.8 | 1.1 | 6.8 | 11.4 | 13.1 | 7.0 |
| *3ஆம் காலாண்டு* | 1.2 | 1.0 | 7.6 | 12.0 | 15.2 | 8.0 |

*மூலம்: குடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்.*

*(அ) முதல் மூன்று காலாண்டுச் சராசரி.*

23.4 சதவீதத்திலிருந்து 1999இல் 13.0 சதவீதத்திற்கும் 2000ஆம் ஆண்டின் முதல் மூன்று காலாண்டுப் பகுதியில் 11.0 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தவிடத்து ஆண்களின் தொழில் வாய்ப்பின்மை வீதம் 1990இன் 11.8 சதவீதத்திலிருந்து 1999இல் 6.7 சதவீதத்திற்கும் 2000ஆம் ஆண்டின் முதல் மூன்று காலாண்டுப் பகுதியிலும் 5.9 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தது. இக்கடுமையான வீழ்ச்சிக்கு அண்மை ஆண்டுகளில் பெண்களுக்கான தொழில்வாய்ப்பு முக்கியமாக தயாரிப்பு, வேளாண்மை, வர்த்தகம் மற்றும் சுற்றுலா விடுதிகள் துறைகளில் வளர்ச்சியடைந்தமையே முக்கிய காரணமாகும்.

வயது அடிப்படையிலான தொழில் வாய்ப்பின்மையைப் பொறுத்தவரையில் 1999 தொடக்கம் 15 –19 வயதினரைக் கொண்ட தொகுதியினருக்கான தொழில் வாய்ப்பின்மை வீதத்தில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி காணப்பட்டது. 2000ஆம் ஆண்டின் முதல் மூன்று காலாண்டுப் பகுதியில் இவ்வயதுத் தொகுதியினரிடையேயான தொழில் வாய்ப்பின்மை வீதம் 1990இன் 40.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 22.0 சதவீதமாகக் காணப்பட்டது. அத்துடன் 1990இலிருந்து 2000வரையான காலப்பகுதியில் 20–29 வயதுத் தொகுதியினரிடையேயான தொழில் வாய்ப்பின்மை வீதம் 30 சதவீதத்திலிருந்து 18 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமையுடன் ஒப்பிடுகையில் இவ்வயதுத் தொகுதி மிகக் கூடியளவு வீழ்ச்சியைக்காட்டியது. 20 – 29 வயதுத் தொகுதியைக் கொண்ட க.பொ.த உயர்தரம் அதற்கு மேலும் கல்விகற்றவர்களிடையேயான தொழிலின்மை நிகழ்வுகள் மிக உயர்வாகக் காணப்பட்டன. க.பொ.த உயர்தரம் மற்றும் அதற்கு மேலும் கல்விகற்ற ஆட்களிடையேயான தொழிலின்மை வீதம் 2000ஆம் ஆண்டின் முதல் மூன்று காலாண்டுப் பகுதியில் 14.6 சதவீதமாக இருந்தது. குறைந்த தகைமைகளைக் கொண்டோரிடையேயான தொழிலின்மை வீதம் குறைவாக இருந்தது. கல்வி கற்றோரிடையேயான உயர்ந்த தொழில் வாய்ப்பின்மைக்கு ஆழமான ஆங்கில அறிவுடன் கணனி அறிவியல், நிதி, முகாமைத்துவம் மற்றும் சந்தைப்படுத்தல் என்பனவற்றில் தகைமைபெற்ற ஆட்களுக்கு கேள்வி காணப்படும் தனியார்துறை தொழிற் சந்தைக்கு ஆட்களை வழங்குவதற்கு பாரம்பரிய பாடங்களுடன் கூடிய மரபுவழிக் கல்வி முறையினால் முடியாமல் போனமையின் வெளிப்பாடே ஓரளவு காரணமாக இருந்தது. அண்மையில் அறிமுகப் படுத்தப்பட்ட கல்விச் சீர்திருத்தங்கள், குறிப்பாக தனியார்துறையின் மாற்றமடைந்துவரும் கேள்வியை ஈடுசெய்யத்தக்க விதத்தில் இரண்டாம் நிலை மற்றும் உயர்கல்வியை மீளவழிப்படுத்துவதன் மூலம் கல்வி கற்றோரிடையே காணப்படும் தொழில் வாய்ப்பின்மையின் உயர் நிகழ்வுகளைக் கட்டுப்படுத்தும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

## 7.6 வெளிநாட்டுத் தொழில் நிலை

பதிவு செய்யப்பட்ட மூலங்களூடாகப் பெறப்பட்ட வெளிநாட்டுத் தொழில்நிலை 1999இன் ஏறத்தாழ 178,000 உடன் ஒப்பிடுகையில் 2000ஆம் ஆண்டில் ஏறத்தாழ 166,000 இற்கு வீழ்ச்சியடைந்து ஏறத்தாழ 12,000 கொண்ட வீழ்ச்சியைப் பதிவு செய்தது. இவ்வீழ்ச்சி 1999இல் காணப்பட்ட ஏறத்தாழ 18,000 கொண்ட அதிகரிப்பிற்கு மாறானதாகும். இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின்படி வெளிநாட்டுத் தொழில்நிலை வீழ்ச்சியடைந்தமைக்கு 2000ஆம் ஆண்டில் இரண்டு ரம்ழான் காலங்கள் இடம் பெற்றமை பெரும்பாலும் காரணமாக இருக்கலாம். ரம்ழான் காலப்பகுதியில் புலம் பெயர்ந்த தொழிலாளர்களுக்கான கேள்வி வீழ்ச்சியுற்றமைக்கு இக்காலப் பகுதியில் மத்திய கிழக்கு நாடுகளின் செயற்பாடுகள் குறைந்த மட்டத்தில் காணப்பட்டமையே காரணமாகும். உரிமம் பெற்ற முகவர்களினூடாகப் பெறப்பட்ட தொழில் வாய்ப்புக்களின் பங்கு 1999இன் ஏறத்தாழ 120,000 இலிருந்து 2000ஆம் ஆண்டில் 127,000இற்கு அதிகரித்தது, உரிமம் பெற்ற முகவர்களினூடாகப் பெறப்பட்ட தொழில் வாய்ப்புக்களின் பங்கு 1999இன் 68 சதவீதத்திலிருந்து 2000ஆம் ஆண்டில் 76 சதவீதத்திற்கு அதிகரித்த பங்கைப் பதிவு செய்தது. இம்முன்னேற்றத்திற்கு இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தினால் உரிமம் பெற்ற முகவர்கள் ஒழுங்கு முறைப்படுத்தப்பட்டு மேற்பார்வை செய்யப்பட்டு வருவதன் விளைவாக புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் உரிமம் பெற்ற முகவர்களின் மீது வைத்த நம்பிக்கை அதிகரித்தமை காரணமாக இருக்கும். இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின்படி, 1999 இறுதியில் 29 அங்கீகரிக்கப்பட்ட தனியார் பயிற்சி முகவர்கள் தொழிற்பாட்டிலிருந்தனர். எனினும் இத்தனியார் பயிற்சி முகவராண்மைகள் சிலவற்றினால் வழங்கப்பட்ட பயிற்சிகளில் ஒழுங்கீனங்கள் காணப்பட்டமையின் காரணமாக வேலைவாய்ப்புப் பணியகம் புலம் பெயர்கின்ற தொழிலாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை தான் மட்டும் சொந்தமாக நடாத்துவதென 2000ஆம் ஆண்டில் கொள்கைத் தீர்மானமொன்றினை மேற்கொண்டது. அவ்வாறிருந்துங்கூட பயிற்சிக்கான கேள்வியை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் முழுமையாக ஈடு செய்யமுடியாமல் இருந்தமையால் 2000ஆம் ஆண்டில் 8 தனியார் பயிற்சி முகவர்களின் பணிகள் பெற்றுக் கொள்ளப்பட்டன.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் பதிவு செய்யப்பட்ட புலம் பெயர்ந்த வேலையாளர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் பல வித உதவிப்பணிகளைத் தொடர்ந்தும் வழங்கியது. இவை, மக்கள் வங்கிக்கூடான வீடமைப்பு மற்றும் சுய வேலைவாய்ப்புக் கடன்கள், பயிற்சி வசதிகளுக்கான ஏற்பாடுகள், புலம் பெயர்ந்த தொழிலாளர்களுக்கும் அவர்களது குடும்பத்தவர்களுக்குமான காப்புறுதித் திட்டங்கள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

1997 இலிருந்து புலம்பெயர்ந்த பெண் தொழிலாளர்களின் பாதுகாப்பினையும் சிறந்த வேலைச் சூழலையும் உறுதிப்படுத்தும் பொருட்டு குறிப்பிட்ட சில நாடுகளில் தொழில் தருநருக்கும் தொழிலாளர் களுக்குமிடையில் பணி உடன்படிக்கை முறையொன்று இடம்பெற்றது. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் இணைக்கப்படுகின்ற இம்முறையானது 2000ஆம் ஆண்டின் இறுதியில் 12 நாடுகளில், அந் நாடுகளின் தொடர்பான வெளிநாட்டு த் தூதரகங்களின் ஆதரவுடன் இடம்பெற்று வருகின்றது. 2000ஆம் ஆண்டிலும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் 1990இல் வளைகுடாப் போரில் குவைத்திலிருந்து இடம் பெயர்ந்த இலங்கைத் தொழிலாளர்களுக்கு இழப்பீட்டுக் கொடுப்பனவுகளைத் தொடர்ந்தும் பகிர்ந்தளித்தது.

அட்டவணை 7.9
வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பு

| விடயம் | 1995 | 1996 | 1997 | 1998 | 1999 | 2000 (அ) |
|---|---|---|---|---|---|---|
| தொழிலில் உள்ளோர் | 172,489 | 162,576 | 150,283 | 159,816 | 178,052 | 166,489 |
| மூலத்தின்படி - | | | | | | |
| உரிமம் பெற்ற | 118,692 | 115,446 | 115,043 | 112,539 | 120,218 | 127,115 |
| ஏனையோர் | 53,797 | -47,130 | 35,240 | 47,277 | 57,834 | 39,374 |
| பால்வகையின்படி | | | | | | |
| ஆண்கள் | 46,021 | 42,112 | 37,552 | 53,867 | 62,949 | 51,850 |
| பெண்கள் | 126,468 | 120,464 | 112,731 | 105,949 | 115,103 | 114,639 |
| மனிதவலுவகை | | | | | | |
| வீட்டுப் பணிப்பெண்கள் | 113,860 | 110,479 | 99,429 | 85,349 | 87,191 | 92,327 |
| தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் | 27,165 | 24,447 | 24,578 | 31,787 | 37,145 | 33,115 |
| தேர்ச்சியற்ற தொழிலாளர்கள் | 23,497 | 21,735 | 20,485 | 34,109 | 43,153 | 31,588 |
| ஏனையோர் | 7,967 | 5,915 | 5,791 | 8,571 | 10,563 | 9,459 |
| உத்தரவுப் பத்திரம் பெற்ற தொழில் முகவர்கள் (வருட முடிவில்) | 477 | 464 | 520 | 385 | 431 | 445 |
| பயிற்சி நிலையங்களின் எண்ணிக்கை | | | | | | |
| வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் | 12 | 15 | 15 | 17 | 20 | 20 |
| தனியார் முகவர்களினால் | - | 22 | 22 | 28 | 29 | 8 |

(அ) தற்காலிகமானவை

மூலம்: இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்